# பாடசாலை வரவு முக்கியமானது

## பெற்றோர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்குமான தகவல்

நீங்கள் நியுஹத்தில் வசித்து, கட்டாயமான பாடசாலை வயதுள்ள பிள்ளைகள் உங்களுக்கு இருந்தால், நீங்கள் அறிந்திருக்க வேண்டிய சில உண்மை விபரங்கள் இங்கே உள்ளன. உங்கள் பிள்ளைகள் அவர்களின் கல்வியிலிருந்து மிகவும் அதிகளவிலான நன்மையைப் பெற்றுக்கொள்கிறார்கள் எனப் பார்த்துக்கொள்வதற்கு நியுஹம் கவுன்சில் உங்களுக்கு ஆதரவளிக்க விரும்புகின்றது. ஒரு நல்ல கல்வி நல்ல வாழ்க்கை வாய்ப்புக்களுக்கு, தொழில் சந்தர்ப்பங்களுக்கு மற்றும் உயர்ந்தளவில் சம்பாதிக்கும் சக்திக்கு வழிவகுக்கின்றது. பிள்ளைகள் சமூகரீதியாகச் சேர்ந்து பழகக் கற்பதற்கு, மனவுறுதி உள்ளவர்களாக இருப்பதற்கு, மற்றும் சமூகத்துக்கு ஒரு சாதகமான பங்களிப்பைச் செய்யும் நல்ல குடிமக்களாக இருப்பதற்கு அது அவர்களுக்கு உதவுகின்றது.

கீழுள்ள குறிப்புகள் பாடசாலை வரவு தொடர்பான விதிகளைத் தெரிவிக்கின்றன.

- 5 – 17 வயதுக்கிடையிலான பிள்ளைகள் அனைவருக்கும் முழு நேரக் கல்வி கட்டாயமானது. (இது 2014 செப்டெம்பரிலிருந்து 18 வயதாக அதிகரிக்கும்).
- பிள்ளைகள் அவர்களது ஐந்து வயதை அடையும் வருடத்தின் செப்டெம்பர் மாதத்தில் அவர்கள் பாடசாலையை ஆரம்பிப்பது நியுஹம் கவுன்சிலின் கொள்கையாகும்.
- நீங்கள் ஒரு பாடசாலை இடத்துக்கு விண்ணப்பித்து, ஆனால் அதனை நீங்கள் ஏற்காவிட்டால், உங்கள் பிள்ளையின் வயதுக்கும் ஆற்றலுக்கும் அவருக்கு இருக்கக்கூடிய ஏதாவது விஷேட கல்வித் தேவைகளுக்கும் பொருத்தமான முழு நேரக் கல்வியை உங்கள் பிள்ளை பெற்றுக்கொள்கிறார் எனப் பார்த்துக்கொள்வதற்கு என்ன ஏற்பாடுகளை நீங்கள் செய்கிறீர்கள் என நீங்கள் கேட்கப்படுவீர்கள்.
- உங்கள் வீடு உங்கள் பிள்ளைக்குக் கல்வி புகட்டினால், நீங்கள் வழங்கும் கல்வி பொருத்தமானது என நியுஹம் கவுன்சில் சரிபார்த்துக்கொள்ளும்.
- உங்கள் பிள்ளையை ஒரு சுதந்திரமான அல்லது மதச் சார்புள்ள பாடசாலையில் நீங்கள் பதிவுசெய்தால், தயவுசெய்து வரவுச் சேவைக்கு அறிவிக்கவும் (தொடர்பு விபரங்கள் கீழே உள்ளன), அல்லாவிட்டால், ஒரு 'கல்வியிலிருந்து தவறும் பிள்ளை' ('Child Missing from Education' – CME) என உங்கள் பிள்ளை அறிவிக்கப்படலாம். இது உங்கள் பிள்ளை ஒரு கல்வியைப் பெற்றுக்கொள்கிறார் எனப் பார்த்துக்கொள்வதற்குச் சரிபார்ப்புக்கள் செய்யப்படுவதை ஏற்படுத்தும்.
- ஒரு பாடசாலை இடத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டதும், உங்கள் பிள்ளை ஒவ்வொரு நாளும், நேரத்துக்கு, தேவையற்ற முறையில் பாடசாலை நாட்களைத் தவிர்க்காமல் பாடசாலைக்குச் செல்கிறார் எனப் பார்த்துக்கொள்வது உங்கள் பொறுப்பாகும். பெற்றோர்கள் இந்தப் பொறுப்பை நிறைவேற்றாவிட்டால், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படலாம்.
- தவணைக் காலத்தில் பாடசாலையில் இல்லாதிருத்தல் அனுமதிக்கப்படவில்லை.
- தவணைக் காலத்தில் உங்கள் பிள்ளையைப் பாடசாலையிருந்தும் எடுப்பது தொடர்பாக, அல்லது பாடசாலைக்குச் செல்லாதிருத்தல் அல்லது நேரத்துக்குச் செல்லாதிருத்தல் தொடர்பான காரணங்களுக்காக உங்களுக்குத் தண்டப் பணம் உள்ளதான தண்டனை அறித்தல் வழங்கப்படலாம்.
- 21 நாட்களுக்குள் செலுத்தப்பட்டால், ஒரு தண்டனை அறிவித்தலால் ஒவ்வொரு பிள்ளைக்குமாக ஒவ்வொரு பெற்றோருக்கும் ஒரு தண்டப் பணமான £60 உண்டாகும். 21 நாட்களுக்குள் செலுத்தப்படாமல், ஆனால் 28 நாட்களுக்குள் செலுத்தப்பட்டால், அது £120 ஆக அதிகரிக்கும். எந்த விதத்திலும் செலுத்தப்படாவிட்டால், வழக்குத் தொடரப்படுதல் தானாகவே ஏற்படும்.

நீங்கள் நாட்டுக்குப் புதியவராக இருந்தால், உங்களை வரவேற்கிறோம். உங்கள் ஆங்கிலத்தைக் கற்பதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு நீங்கள் விரும்பினால், உங்கள் பிள்ளையின் பாடசாலையில் விசாரிக்கவும். உள்ளூரிலுள்ள வகுப்புக்கள் பற்றி உங்களுக்குத் தகவல் கொடுக்கப்படும்.

மேலதிக தகவலுக்கு, வரவு நிர்வகிப்புச் சேவையைத் தயவுசெய்து பின்வருவன மூலமாகத் தொடர்புகொள்ளவும்:

தொலைபேசி: 020 3373 0390

மின் அஞ்சல்: attendance.management@newham.gov.uk